**ஜனவரி – 21**

# TNPSC துளிகள்

- 2020-21 ஆம் ஆண்டிற்கான தேசிய மின்னாளுகை (வெள்ளி) விருதானது, சமீபத்தில் நாகாலாந்தின் மோன் மாவட்ட நிர்வாகத்திற்கு வழங்கப்பட்டது.
    - ஹைதராபாத்தில் நடைபெற்ற 24வது தேசிய மின்னாளுகை மாநாட்டில் இந்த விருதானது மின்னாளுகை மீதான ஹைதராபாத் தீர்மானத்துடன் சேர்த்து வழங்கப் பட்டது.

# தேசியச் செய்திகள்

## இந்திய ராணுவத்தின் புதிய போர்ச் சீருடை

- இந்திய ராணுவமானது 12 லட்சத்திற்கும் அதிகமான இராணுவ அதிகாரிகளுக்கு புதிய சீருடைகளை வழங்க உள்ளது.
- பழைய சீருடைகளைப் போலல்லாமல், புதிய சீருடை ஒரு போர்க்களத்திற்கான ஓர் உள்சட்டையைக் கொண்டுள்ளது.
- முந்தைய ரக சீருடையானது 2008 ஆம் ஆண்டிலிருந்து பயன்படுத்தப்பட்டு வருகிறது.
- புதிய சீருடையானது இலகுவான, திடமான மற்றும் காற்று புகும் வகையிலான ஒரு துணியினால் செய்யப்பட்டுள்ளது.
- இதில் பருத்தி மற்றும் பாலியஸ்டர் கலப்பின் விகிதம் 70:30 ஆகும்.
- பழைய சீருடையுடன் ஒப்பிடுகையில், புதிய சீருடையானது 15% இலகுவானது மற்றும் 23% வலுவானது ஆகும்.



## புத்தாக்க நிறுவனங்களுக்கான சில்லுகள் தயாரிக்கும் திட்டம் (C2S)

- 100 புத்தாக்க நிறுவனங்கள், குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள், ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு அமைப்புகள் மற்றும் கல்வித் துறை நிறுவனங்கள் போன்றவற்றிடமிருந்து "புத்தாக்க நிறுவனங்களுக்கான சில்லுகள் தயாரிக்கும் ஒரு திட்டத்தின்" கீழ், மத்திய அரசு விண்ணப்பங்களை கோரியுள்ளது
- இது மிகப் பெரிய அளவிலான ஒருங்கிணைப்பு மற்றும் பதிப்பு முறை வடிவமைப்புத் துறைகளில் 85,000 பொறியாளர்களுக்குப் பயிற்சி அளித்திட எண்ணுகின்றது.
- இந்தத் திட்டமானது ஐந்து ஆண்டுகளுக்கான 175 ASICகள் (பயன்பாடு சார்ந்த

ஒருங்கிணைந்தச் சுற்றுகள்), IP மையக் களஞ்சியம் மற்றும் சில்லுகள் சார்ந்த 20 அமைப்புகளின் IP களஞ்சியம் மற்றும் செயல்நிலை முன்மாதிரிகள் ஆகியவற்றின் உருவாக்கத்திற்கு வழி வகுக்கும்.

- இது இளநிலை, முதுநிலை மற்றும் ஆராய்ச்சி மட்டங்களில் SoC /அமைப்பு (கணினி) நிலை வடிவமைப்புக் கலாச்சாரத்தினை உட்புகுத்துவதன் மூலம் மின்னணு அமைப்பு வடிவமைப்பு மற்றும் உற்பத்தி (ESDM) துறையில் முன்னோக்கிய வளர்ச்சிக்கான ஒரு படியாக அமையும்.




## 2021 ஆம் ஆண்டில் இந்தியா - சீனா இடையிலான வர்த்தகம்

- 2021 ஆம் ஆண்டில் இந்தியா மற்றும் சீனா ஆகிய இரு நாடுகளுக்கு இடையேயான வர்த்தகமானது 125 பில்லியன் டாலர் மதிப்பாக இருந்தது.
- சீனாவிடமிருந்து இந்தியா மேற்கொள்ளும் இறக்குமதியின் மதிப்பானது 100 பில்லியன் டாலராக இருந்தது.
- இயந்திர சாதனங்களுக்குத் தான் அதிகப்படியான இறக்குமதி தேவைகள் இருந்தன.
- 2021 ஆம் ஆண்டில் சீனாவுடன் 69.4 பில்லியன் அமெரிக்க டாலர் மதிப்பில் வர்த்தகப் பற்றாக்குறையினை இந்தியா எதிர்கொண்டது.
- இது 2019 ஆம் ஆண்டில் எதிர்கொண்டதை விட 22% அதிகமாக இருந்தது.
- 2021 ஆம் ஆண்டில் மட்டும் சீனாவில் இருந்து இறக்குமதி செய்யப்படும் பொருட்களின் அளவானது இரு நாடுகளுக்கும் இடையேயான ஒட்டு மொத்த வர்த்தக அளவைத் தாண்டியது.
- 2021 ஆம் ஆண்டில் சீனாவிற்கு இந்தியாவில் இருந்து ஏற்றுமதி செய்யப்பட்ட முக்கியப்

பொருட்கள் பருத்தி, இரும்பு தாது, மற்றும் மூலப்பொருள் சார்ந்த பொருட்கள் ஆகியன ஆகும்.

- மின் இயந்திரங்கள், இயந்திரச் சாதனங்கள், ஆக்சிஜன் செறிவூட்டிகள் போன்ற மருத்துவ உபகரணங்கள், வீரியமிக்க மருந்து பொருட்கள், குறைகடத்தி சாதனங்கள், மின்கலங்கள் போன்றவை அங்கிருந்து இறக்குமதி செய்யப்பட்டன.




## இந்தியாவின் பருவநிலைப் பேரிடர்கள் மற்றும் பாதிப்பு நிலை வரைபடம்

- CRS என்ற அமைப்பின் அறிவியலாளர்கள் மற்றும் விஞ்ஞானிகள் இந்தியாவின் பருவ நிலைப் பேரிடர்கள் மற்றும் பாதிப்பு நிலை வரைபடத்தினை உருவாக்கியுள்ளனர்.
- CRS என்பது இந்திய வானிலைத் துறையின் கீழ் செயல்படுகின்ற ஒரு பருவநிலை ஆராய்ச்சி மற்றும் சேவை அமைப்பாகும்.
- 14 தீவிரமான வானிலை நிகழ்வுகளின் அடிப்படையில் இந்த வரைபடத்தினை அறிவியலாளர்கள் உருவாக்கியுள்ளனர்.
- ஒரு பகுதி (உள்ளூர்) மக்களின் மீதும் அவர்களின் பொருளாதார நிலை மீதும் இந்த 14 வித வானிலை நிகழ்வுகள் ஏற்படுத்திய இடர்கள் மற்றும் அச்சுறுத்தல்களையும் அவர்கள் கணக்கில் கொண்டனர்.
- இங்கே 'உள்ளூர்' என்பது மாவட்டத்தைக் குறிக்கின்றதே அன்றி அது மாநிலத்தையோ கிராமத்தையோ குறிப்பது அல்ல.

## ஃப்ளிப்கார்ட் - புதிய புத்தாக்க நிறுவனத் திட்டங்கள்

- LEAP என்பது ஃப்ளிப்கார்ட் நிறுவனத்தின் ஒரு புதிய புத்தாக்க நிறுவனத் திட்டம் ஆகும்.
- இது Leap Ahead என்றும் அழைக்கப்படுகிறது.
- இந்தியாவில் உள்ள புத்தாக்க நிறுவனங்களுக்கு உதவி வழங்குவதை இது நோக்கமாக கொண்டுள்ளது.
- இந்தத் திட்டத்தின் கீழ் ஃப்ளிப்கார்ட் நிறுவனம் இரண்டு திட்டங்களைச் செயல்படுத்த உள்ளது.
- அவை FLIN மற்றும் FLA ஆகியவை ஆகும்.
- FLIN என்பதன் விரிவாக்கம் Flipkart Leap Innovation Network என்பதாகும்.
- FLA என்பதன் விரிவாக்கம் Flipkart Leap Ahead என்பதாகும்.

- இது அதிநவீனத் தொழில்நுட்பங்களில் ஈடுபாடு செலுத்தும் புத்தாக்க நிறுவனங்களில் முதலீடு செய்ய உள்ளது.

## தடையற்ற (திறந்த நிலை) தரவு வாரம்

- தடையற்ற (திறந்த நிலை) தரவு வாரம் ஆனது வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற விவகாரங்கள் துறை அமைச்சகத்தினால் தொடங்கப்பட்டது.
- இது 2022 ஆம் ஆண்டு ஜனவரி 17 முதல் 21 வரையில் கொண்டாடப்படுகிறது.
- இது நாட்டின் நகர்ப்புறச் சூழலில் புத்தாக்கத்தினை ஊக்குவிக்கிறது.
- இந்த ஒரு வார கால அளவிலான கொண்டாட்டத்தின் போது, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற விவகாரங்கள் துறை அமைச்சகமானது, பொலிவுறு நகரங்களைப் பற்றிய உயர்தர வலைப் பதிவுகள் மற்றும் தரவுத் தொகுதிகளை வெளியிட்டது.
- இந்தத் தரவுகள் ஒரு திறந்தநிலை தரவு தளத்தில் வெளியிடப்பட உள்ளன.




## UPI AUTOPAY - ஜியோ

- இந்தியத் தேசியப் பணவழங்கீட்டுக் கழகம் மற்றும் ரிலையன்ஸ் ஜியோ ஆகியவை இணைந்து தொலைதொடர்புத் துறைக்கான UPI AUTOPAY என்ற ஒன்றை அறிமுகப் படுத்தியுள்ளன.
- இதன்மூலம், இந்தியத் தேசியப் பணவழங்கீட்டுக் கழகத்தினால் தொடங்கப்பட்ட ஒரு தனித்துவமிக்க கட்டாயப் படுத்தப் பட்ட இணைய அம்சத்துடன் உள்ள முதல் தொலை தொடர்பு நிறுவனமாக இது மாறியுள்ளது.
- இந்தியத் தேசியப் பணவழங்கீட்டுக் கழகத்தினால் தொடங்கப்பட்ட UPI AUTOPAY அமைப்பைப் பயன்படுத்தி, வாடிக்கையாளர்கள் இப்போது கைபேசிக் கட்டணங்கள், மின்சாரக் கட்டணங்கள், மாதத் தவணைகள் போன்ற அடிக்கடி செலுத்த வேண்டியக்


கட்டணங்களை UPI செயலியைப் பயன்படுத்திச் செலுத்தலாம்.

- இதில் ரூ.5000 வரையிலான மறு மதிப்பேற்றத் தொகைகளுக்கு வாடிக்கையாளர் UPI PIN என்ற ஒரு எண்ணை உள்ளீடு செய்யத் தேவையில்லை.




## சர்வதேசச் செய்திகள்

### எனிக்மா




- "எனிக்மா" எனப்படும் 555.55 காரட் மதிப்புள்ள ஒரு கருப்பு வைரம் துபாயில் அறிமுகப் படுத்தப் பட்டது.
- அது சொதேபிஸ் எனும் ஒரு ஏல நிறுவனத்தினால் வெளியிடப்பட்டது.
- இது துபாய் முழுவதும் காட்சிப் படுத்தப்பட்டப் பிறகு, 2022 ஆம் ஆண்டு பிப்ரவரி

மாதத்தில் இலண்டனில் ஏலத்திற்கு விடப்படுவதற்கு முன்பாக லாஸ் ஏஞ்சல்ஸ் நகரத்திற்கு கொண்டு செல்லப்படும்.

- இது 55 பக்கங்களைக் கொண்டதால் 5 என்ற எண் ஆனது இந்த வைரத்துடன் ஒரு சிறப்பு முக்கியத்துவத்தைக் கொண்டுள்ளது.

## ஐஸ்ஃபிஸ் (Icefish) இனப்பெருக்கப் பகுதி

- ஆழ்கடல் அறிவியலாளர்கள் அண்டார்டிகாவில் உள்ள வெடல் கடலில் ஐஸ்ஃபிஸ் என்ற மீன் இனத்தின் ஒரு இனப்பெருக்க பகுதியைக் கண்டறிந்துள்ளனர்.
- இதன் அறிவியல் பெயர் நியோபாகிரட்டாப்சிஸ் ஐயோனா (Neopagrtopsis ionah) என்பது ஆகும்.
- இந்த இனமானது 2021 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதத்தில் கண்டுபிடிக்கப்பட்டது.
- எனினும், இவற்றின் இனப்பெருக்க பகுதிகள் சமீபத்தில் தான் கண்டுபிடிக்கப் பட்டன.



## இந்தோனேஷியாவின் புதிய தலைநகர்





- இந்தோனேஷியா நாடானது பருவநிலை மாற்றத்தின் காரணமாக தனது புதிய ஒரு தலைநகரத்திற்கு அனைத்தையும் மாற்றிக் கொண்டு இருக்கின்றது.
- அது கிழக்கு கலிமந்தன் ஆகும்.
- இது தற்போது 'நுசான்தாரா' என்று அழைக்கப்படுகிறது.
- முன்னதாக, ஜகார்த்தா நகரம் ஆனது இந்தோனேஷியாவின் தலைநகரமாக இருந்தது.

- ஜகார்த்தா நகரமானது அதிக மக்கள்தொகை அடர்த்தியுடனும் அதிக மாசுக்களுடனும் ஜாவா கடலில் மூழ்கிக் கொண்டிருக்கின்றது.

# அறிவியல் மற்றும் தொழில்நுட்பச் செய்திகள்


## குறுங்கோள் 1994 PC1

- 1994 PC1 என்ற குறுங்கோளானது 2022 ஆம் ஆண்டு ஜனவரி 18 அன்று பூமியைக் கடந்து சென்றுள்ளது.
- இது பூமியை 1.2 மில்லியன் மைல் தொலைவில் கடந்து சென்றது.
- இது "7482" என்ற பெயரிலும் அழைக்கப்படுகிறது.
- இதன் நீளம் ஒரு கிலோமீட்டருக்கும் அதிகமானதாகும்.
- இது கடினமான பாறைகளால் ஆன ஒரு குறுங்கோள் ஆகும்.
- இது ஆபத்தினை உண்டாக்கக் கூடிய குறுங்கோள் என்றும், பூமிக்கு அருகில் உள்ள ஒரு குறுங்கோள் என்றும் வகைப்படுத்தப்பட்டுள்ளது.




# மாநிலச் செய்திகள்

## குரு ரவிதாஸ் ஜெயந்தி



- குரு ரவிதாஸ் ஜெயந்தியானது மக மாதத்தின் அமாவாசை நாளில் அதாவது மக பூர்ணிமா அன்று கொண்டாடப் படுகிறது.
- இது இந்தியாவின் அனைத்துப் பகுதிகளிலும் கொண்டாடப்படுகிறது.
- ரவிதாஸ் ஒரு சமூக சீர்திருத்தவாதியும் ஆன்மீக மனிதரும் ஆவார்.

- சாதியத்திற்கு எதிராக இவர் ஆற்றியப் பணிக்காக வேண்டி இவர் வெகு பிரபலமாக அறியப் படுகிறார்.
- ரவிதாஸ், கபீர் காலத்தில் வாழ்ந்த ஒரு துறவி ஆவார்.
- இந்தியத் தேர்தல் ஆணையமானது சமீபத்தில், ரவி தாஸ் ஜெயந்தியின் காரணமாக பஞ்சாப் மாநிலத்தில் நடைபெற இருந்த சட்டசபைத் தேர்தல்களை ஒத்தி வைத்தது.
- புதிய அட்டவணையின் படி, அம்மாநிலத்தில் தேர்தல்கள் பிப்ரவரி 20 அன்று நடைபெற இருக்கின்றன.

# பிரபலமானவர்கள், விருதுகள், மற்றும் நிகழ்வுகள்

## சிறந்த தேசிய ஆடை விருது



- லாஸ் வேகாஸின் நெவேடா நகரில் நடைபெற்ற புகழ்பெற்ற ‘2022 ஆம் ஆண்டிற்கான உலகத் திருமதி’ என்ற ஒரு போட்டியில் சிறந்த தேசிய ஆடைக்கான விருதானது இந்தியாவைச் சேர்ந்த நவ்தீப் கவுர் என்பவருக்கு வழங்கப்பட்டுள்ளது.
- இவர் 2021 ஆம் ஆண்டிற்கான திருமதி இந்தியா- உலக அழகிப் பட்டத்தை வென்றவர் மற்றும் 2022 ஆம் ஆண்டு உலகத் திருமதி போட்டியில் இந்தியா சார்பாக போட்டியிட்டவர் ஆவார்.
- இவர் ஒடிசாவின் எஃகு நகரம் என அழைக்கப்படும் ரூர்கேலாவின் அருகேயமைந்த ஒரு சிறிய நகரத்தைச் சேர்ந்தவர் ஆவார்.
- 'அவந்த் கார்டே' எனும் உடையானது குண்டலினிச் சக்கரத்தின் வடிவில் அமைக்கப் பட்டது,
- இது மனித உடலின் பாதம் முதல் தலை வரையில் ஆற்றல் பாய்வதைச் சித்தரிக்கும் வகையில் அமைக்கப் பட்டது.

★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★